**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.28/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏகாம்பரம் | மதம் | : இந்து |
| த/பெ | : சோலைகான் | ஜாதி | : -- |
| வயது | : 62 | கிராமம் | : காவேரிராஜபுரம் |
| தொழில் | : சமூகப்பணி | வட்டம் | : திருத்தணி |

**05.03.2025**

**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் வாதி சங்கர் அழைத்துதான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சங்கர், திலீப் குமார் அழைத்து சாட்சி சொல்ல வந்தேன். நான் காவேரிராஜபுரத்தில் வசித்து வருவதை காட்ட எனது அடையாள அட்டை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான் காவேரிராஜபுரத்தில் வார்டு உறுப்பினராக பல வருடங்களாக இருப்பதாக கூறியிருப்பதில் எத்தனை வருடங்களாக அவ்வாறு உள்ளேன் என்றால் 1991ல் இருந்து 1996 வரை 5 வருடங்கள் இருந்தேன். 1997 முதல் 2001 வரை 5 வருடங்கள் இருந்தேன்.

2. வார்டு உறுப்பினராக நான் இருந்தேனா என் மனைவி இருந்தாரா என்றால் நானும் இருந்தேன். என் மனைவியும் இருந்தார். நானும் என் மனைவியும் வார்டு உறுப்பினராக இருந்ததை காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கை வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்தை திலீப் குமார், சங்கருக்கு வாங்கி கொடுக்கும்போது நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்தை சங்கர் வாங்கியுள்ளார். அதை வேறு ஒருவர் சொந்தம் கொண்டாடுவதால் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

3. சுலோச்சனா, யோகநாதன் வாதிகளுக்கு எழுதி கொடுத்த ஆவணத்தில் நான் எத்தனையாவது கையெழுத்து செய்துள்ளேன் என்றால் முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கிரைய ஆவணம் எழுதப்பட்ட தேதி சொல்ல முடியுமா என்றால் 22.03.2017 ஆகும். 30.07.2012 லேயே ராமசந்திரன் என்ற சந்திரகேஷ் என்ற சந்திரன் ரூ.15,000/-க்கு வழக்கு சொத்தை முனுசாமிக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிரைய ஆவணம் எழுதப்பட்ட 22.03.2017 க்கு முன்பிருந்தே பிரதிவாதிகள் தாவா சொத்தில் சிமெண்ட் சீட்டு போட்ட குடிசை அமைத்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சந்திரகேஷ் வாழ்ந்திருந்த இடமாகும். அந்த இடத்தில் சந்திரகேஷின் அம்மா இருந்தார். வழக்கு சொத்தின் புல எண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் புல எண்.105/11A, பட்டா எண்.390, விஸ்தீரணம் 807 சதுரடியாகும்.

4. மொத்தம் 1614 சதுரடி என்றாலும் அதில் பாதிதான் 807 சதுரடி என்றால் 1614 ல் முனுசாமி த/பெ குப்பனுக்கு பாதி, சந்திரகேஷுக்கு பாதி ஆகும். வழக்கு சொத்து நான் சாட்சி கையெழுத்து போட்ட கிரைய ஆவணத்தின்படி வாதிகளுக்கு சொந்தம் என்று எந்த அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சந்திரகேஷின் மனைவி சுலோச்சனாவும் மகன் யோகநாதனும் பத்திர அலுவலகத்திற்கு வந்து எழுதி கொடுத்தனர். நான் சாட்சி கையெழுத்து போட்ட சொத்திற்கு உரிமையாளர் வாதி இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கின் 3 ம் தரப்பினர் சாட்சி என்றாலும் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என்று சொல்ல எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் வாதியும் எனது உறவினர்தான். பிரதிவாதியும் உறவினர்தான். எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)